பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
07. 01 .2025 **TUESDAY** 7 .15 **AM**
ஆகாஷவாணி - செய்திகள்

தலைப்புச் செய்திகள்

1. இந்தியாவில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் விரிவாக்க முதலீட்டு திட்டங்கள் குறித்து அதன் தலைமைச் செயல் அதிகாரியுடன் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஆலோசனை நடத்தினார்.

2. வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டங்களை மத்திய நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நிறைவு செய்துள்ளார்.

3. பல்கலைக் கழக மானியக் குழுவின் இந்த ஆண்டிற்கான கட்டுப்பாடுகள் குறித்த வரைவு அறிக்கையை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் புதுதில்லியில் வெளியிட்டார்.

4. பங்களாதேஷ் முன்னாள் அதிபர் திருமதி. ஷேக் ஹசீனா உள்ளிட்ட 11 பேருக்கு எதிராக சர்வதேச குற்றங்கள் தீர்ப்பாயம் கைது உத்தரவு பிறப்பித்துள்ளது.

5. ஐஎல்எஸ் கால்பந்துப் போட்டியில் மும்பை அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடியை, மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் தலைமை செயல் அதிகாரி திரு. சத்யா நாதெள்ளா புதுதில்லியில் நேற்று சந்தித்து பேசினார்.

இந்த சந்திப்பு குறித்து சமூகவலைதளத்தில் பதிவிட்டுள்ள பிரதமர், இந்தியாவில் மைக்ரோசாப்ட் நிறுவனத்தின் முதலீட்டு திட்டங்கள் மற்றும் விரிவாக்கம் குறித்து தாம் அறிந்து கொண்டதாக குறிப்பிட்டுள்ளார்.

மேலும் தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்பு, செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட பல்வேறு விஷயங்கள் குறித்து இந்த சந்திப்பின் போது விவாதிக்கப்பட்டதாகவும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

பிரதமர் திரு. நரேந்திர மோடி இரண்டு நாள் பயணமாக ஆந்திரா மற்றும் ஒடிசா மாநிலங்களுக்கு நாளை செல்கிறார்.

ஆந்திர மாநிலம், விசாகப்பட்டினத்தில் இரண்டு லட்சம் கோடி ரூபாய் மதிப்பிலான திட்டங்களை தொடங்கி வைப்பதுடன், புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

நாட்டிலேயே முதல்முறையாக பசுமை ஹைட்ரஜன் உற்பத்திக்கான திட்டப் பணிகளுக்கு பிரதமர் அடிக்கல் நாட்டவுள்ளார்.

இத்திட்டத்திற்காக 85 ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படவுள்ளது.

மேலும், பல்வேறு ரயில்வே மற்றும் சாலை திட்டப் பணிகளையும் பிரதமர் தொடங்கி வைக்கவுள்ளார்.

பின்னர் ஒடிசா செல்லும் பிரதமர், புவனேஷ்வரில் 18வது வெளிநாடுவாழ் இந்தியர்கள் மாநாட்டை தொடங்கி வைக்கிறார்.

>>>>>><<<<<<

சர்வதேச காவல்துறை தகவல்களை ஒருங்கிணைக்கும் வகையிலான 'பாரத் போல்' என்ற இணையதளத்தை மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா இன்று புதுதில்லியில் தொடங்கி வைக்கிறார்.

மத்திய புலனாய்வு அமைப்பான சிபிஐ இந்த இணையதளத்தை வடிவமைத்துள்ளது.

சர்வதேச காவல்துறையான இண்டர்போல் மூலம், வரப்பெறும் கோரிக்கைகளை ஒருங்கிணைப்பதற்காகவும், சிவப்பு நோட்டீஸ் மற்றும் இண்டர்போல் வழங்கும் பல்வேறு வகையான நோட்டீஸ்களையும் வழங்கும் வகையில் புதிய இணையதளம் இருக்கும் என்று சமூகவலைதளத்தில் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

விசாரணை அமைப்புகளுக்கு ' பாரத் போல்' இணையதளம் குறிப்பிடத்தக்க பங்களிப்பை வழங்கும் என்றும் அவர் கூறியுள்ளார்.

இந்திய புலனாய்வு அமைப்புகளை சர்வதேச அளவில் மேம்படுத்தும் பிரதமர் திரு. நரேந்திர மோடியின் திட்டத்தை நிறைவேற்றும் வகையில் இந்த இணையதளம் உருவாக்கப்பட்டிருப்பதாகவும் திரு. அமித் ஷா அதில் குறிப்பிட்டுள்ளார்.

>>>>>><<<<<<

வரும் நிதியாண்டிற்கான பட்ஜெட்டுக்கு முந்தைய ஆலோசனைக் கூட்டங்களை நிதியமைச்சர் திருமதி. நிர்மலா சீதாராமன் நிறைவு செய்துள்ளார்.

கடந்த மாதம் 6ஆம் தேதி தொடங்கிய பட்ஜெட் குறித்த இந்த ஆலோசனைக் கூட்டங்களில் பல்வேறு தரப்பினருடன் அவர் விரிவான ஆலோசனை நடத்தியுள்ளார்.

தொழில் நிறுவனங்களின் அதிபர்கள், பொருளாதார நிபுணர்கள், விவசாய சங்கங்களின் பிரதிநிதிகள், தொழிற்சங்க நிர்வாகிகள், கல்விமற்றும் சுகாதாரத்துறையை சேர்ந்தவர்கள் உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்டோருடன் நிதியமைச்சர் விரிவான ஆலோசனை நடத்தியுள்ளார்.

அவர்களின் கருத்துக்கள் பட்ஜெட் தயாரிப்பின் போது பரிசீலிக்கப்படும் என்று திருமதி. நிர்மலா சீதாராமன் உறுதி அளித்துள்ளார்.

வரும் 10ஆம் தேதி முதல் பட்ஜெட் குறித்த ஆலோசனைகள் மற்றும் பரிந்துரைகளை நாட்டு மக்கள் **'Mygov'** என்ற இணையதளத்தின் மூலம் தெரிவிக்கலாம் என்று நிதியமைச்சகம்தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

பல்கலைக் கழக மானியக் குழுவின் இந்த ஆண்டிற்கான கட்டுப்பாடுகள் குறித்த வரைவு அறிக்கையை மத்திய கல்வி அமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் புதுதில்லியில் நேற்று வெளியிட்டார்.

பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்களின் நியமனம், அவர்களின் பதவி உயர்வு, கல்வித் தகுதி உள்ளிட்டவை தொடர்பான கட்டுப்பாடுகள் அதில் இடம்பெற்றுள்ளன.

பல்கலைக் கழகங்கள் தங்களுக்குத் தேவையான பேராசிரியர்கள் உள்ளிட்டோரை நியமிக்கவும், பதவி உயர்வு வழங்கவும் இந்த வரைவு அறிக்கையில் வகை செய்யப்பட்டுள்ளது.

அப்போது பேசிய திரு. தர்மேந்திர பிரதான், உயர்கல்வியில் புதுமை கண்டுபிடிப்பு, வெளிப்படைத்தன்மையை வழங்கும் வகையிலான வழிமுறைகளையும், சீர்திருத்தங்களையும் கொண்டதாக இந்த வரைவு அறிக்கை உள்ளது என தெரிவித்தார்.

புதிய கல்விக் கொள்கையை வெளிப்படுத்தும் வகையில், இந்த அறிக்கையை தயார் செய்திருப்பதாக பல்கலைக் கழக மானியக்குழுவின் அலுவலர்களுக்கு அமைச்சர் பாராட்டு தெரிவித்தார்.

இந்த வரைவு அறிக்கை பொதுமக்களின் கருத்தை அறிந்து கொள்வதற்காக வெளியிடப்பட்டுள்ளதாக திரு. தர்மேந்திர பிரதான் கூறினார்.

>>>>>><<<<<<

ஜம்மு காஷ்மீரில் ரயில்வே திட்டங்கள் தொடங்கப்பட்டிருப்பதன் மூலம், அங்கு ரயில்வே துறை புதிய உத்வேகத்தை அடையும் என்று மத்திய இணையமைச்சர் திரு. ஜிதேந்திர சிங் கூறியுள்ளார்.

ஜம்முவில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் பேசிய அவர், காஷ்மீரின் கிராமப்புற பகுதிகளையும் இணைக்கும் வகையிலான ரயில்வே திட்டங்கள் தொடங்கி வைக்கப்பட்டிருப்பதாகவும், ஜம்மு காஷ்மீரின் மேம்பாட்டிற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான அரசே காரணம் என்றும் தெரிவித்தார்.

ஒரு காலத்தில் ஜம்மு காஷ்மீரில் ரயில் நிலையங்கள் அமைப்பதே இயலாத நிலை இருந்ததை மாற்றியமைத்து, தற்போது அப்பகுதி மக்களின் கனவு நிறைவேறியிருப்பதாகவும் திரு. ஜிதேந்திர சிங் கூறினார்.

>>>>>><<<<<<

இந்திய திரைப்பட விழா இலங்கை தலைநகர் கொழும்புவில் நேற்று தொடங்கியது.

இந்திய தூதரகமும், சுவாமி விவேகானந்தா கலாச்சார மையமும் இணைந்து வரும் 10ஆம் தேதி வரை இந்த விழாவை நடத்துகிறது.

விழாவை அந்நாட்டு விளையாட்டு மற்றும் இளைஞர் நலத்துறை அமைச்சர் திரு. சுனில் குமார காமேஜ் தொடங்கி வைத்தார்.

இந்திய திரைப்பட கலாச்சாரத்தை பிரதிபலிக்கும் வகையில் இலங்கையின் பல்வேறு நகரங்களிலும் திரைப்படங்கள் திரையிடப்படவுள்ளன.

>>>>>><<<<<<

பங்களாதேஷ் முன்னாள் அதிபர் திருமதி. ஷேக் ஹசீனா உள்ளிட்ட 11 பேருக்கு எதிராக சர்வதேச குற்றங்கள் தீர்ப்பாயம் கைது உத்தரவு பிறப்பித்துள்ளது

திருமதி. ஷேக் ஹசீனா தவிர அவருடைய முன்னாள் பாதுகாப்பு ஆலோசகர் மேஜர் ஜெனரல் தாரிக் அஹமது சித்திக், முன்னாள் காவல்துறை தலைவர் திரு. பெனாசிர் அஹமது உள்ளிட்டோர் மீது கைது உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷில் கடந்த 15 ஆண்டுகால அவாமி லீக் கட்சியின் ஆட்சிக் காலத்தில் காணாமல் போனவர்கள் மற்றும் பிற வழக்குகளில் கொல்லப்பட்டவர்கள் குறித்த குற்றச்சாட்டுகளின் கீழ் இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

நீதிபதி **Mohamed Golam Mortuza** தலைமையிலான தீர்ப்பாயம் நேற்று இந்த உத்தரவை பிறப்பித்தது.

>>>>>><<<<<<

கனடாவில் ஆளும் லிபரல் கட்சியின் தலைவர் பதவியிலிருந்து விலகுவதாக அந்நாட்டுப் பிரதமர் திரு. **Justin Trudeau** அறிவித்துள்ளார்.

புதிய தலைவரை தேர்வு செய்யும் வரை பிரதமர் பதவியை தாம் தொடரவிருப்பதாக அவர் நேற்று அறிவித்தார்.

கடந்த 11 ஆண்டுகளாக லிபரல் கட்சியின் தலைவராகவும், ஒன்பதாண்டுகளாக பிரதமர் பொறுப்பிலும் அவர் இருந்துள்ளார்.

உட்கட்சியில் அவருக்கு ஏற்பட்ட எதிர்ப்பு காரணமாக திரு. **Justin Trudeau** தற்போது பதவி விலகியிருக்கிறார்.

>>>>>><<<<<<

வடகொரியா, இந்த ஆண்டில் முதல்முறையாக நேற்று அணுஆயுதங்களுடன் கூடிய ஏவுகணை சோதனையை நடத்தியுள்ளது.

கண்டம் விட்டு கண்டம் பாயும் நவீன ரக ஏவுகணை சோதனையை நடத்தியிருப்பதற்கு தென்கொரியா கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இதனை எதிர்கொள்ளும் வகையில், கொரிய தீபகற்ப பகுதியில் தென்கொரியா கூட்டு போர் பயிற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

>>>>>><<<<<<

ஐஎல்எஸ் கால்பந்துப் போட்டியில், மும்பை அணி - ஈஸ்ட் பெங்கால் அணியை வென்றது.

கொல்கத்தாவில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் 3-2 என்ற கோல்கணக்கில் மும்பை அணி வெற்றிபெற்றது.

இந்த தொடரில் இதுவரை நடைபெற்ற ஆட்டங்களில் புள்ளிகள் பட்டியலில் மோகன் பஹான் அணி முன்னிலையில் உள்ளது.

நாளை கோவாவில் நடைபெறும் ஆட்டத்தில் கோவா – ஹைதராபாத் அணிகள் மோதுகின்றன.

>>>>>><<<<<<

மலேசிய ஓப்பன் பேட்மிண்டன் போட்டி இன்று தொடங்கியது.

கோலாலம்பூரில் நடைபெறும் இப்போட்டியில் இந்தியாவின் லக்ஷயா சென், எச்.எஸ் பிரணாய், பிரியன்சு ரஜாவத், ஆகர்ஷி காஷ்யப் உள்ளிட்ட முன்னணி வீரர்கள் பங்கேற்கின்றனர்.

மகளிர் இரட்டையர் பிரிவில் இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் திரிஷா ஜோலி – காயத்ரி கோபிசந்த இணை, தாய்லாந்தின் **Ornnicha – Sukitta** இணையை எதிர்கொள்கிறது.

ஆடவர் இரட்டையர் பிரிவில் ரங்கி ரெட்டி - சிராக் ஷெட்டி இணை நாளை சீன தைபே இணையை எதிர்கொள்கிறது.

>>>>>><<<<<<

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் ஹரியானாவின் சூர்மா அணி – தில்லி அணியை வென்றது.

ரூர்கேலாவில் நடைபெற்று வரும் இப்போட்டியில், இரு அணிகளும் தலா 2 கோல் அடித்திருந்த நிலையில், பெனால்டி சூட்அவுட் முறையில் 3-1 என்ற கோல்கணக்கில் ஹரியானா அணி வெற்றிபெற்றது.

இன்று நடைபெறவுள்ள ஆட்டத்தில் ஒடிசா அணி – பெங்கால் அணியை எதிர்கொள்கிறது.

இப்போட்டி இரவு மணி 8.15-க்கு தொடங்குகிறது.

>>>>>>END<<<<<<